**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2019–2020 & thereafter)**

**SUBJECT CODE: 19TM/FC/SI44**

**B.Voc. DEGREE EXAMINATION, APRIL 2023**
**FOURTH SEMESTER**

| | | | |
|---|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – COURSE** | |
| **PAPER** | **:** | **SANGA ILAKKIYAM** | |
| **TIME** | **:** | **3 HOURS** | **MAX. MARKS: 100** |

**பகுதி-அ**

***(அ) அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தருக.*** *10 X 1=10*

*1. நீர் இன்று அமையா உலகம் போலத் தம் இன்று அமையா ... யார் யாரைக் கூறியது?*
*2. **நீகண் டனையோ? கண்டார்க் கேட்டனையோ** ...? யார் கூற்று?*
*3. 'ஒன்னார்' என்ற சொல் யாரைக் குறிக்கின்றது?*
*4. இரவா, பகலா என்று தெரியாதபடி பகல் போல இரவிலும் விளக்கு எரியும் ஊர் எது?*
*5. விசும்பு என்பதன் பொருள் யாது?*
*6. புற்றிலிருந்து கிளம்பும் ஈசல் அழிவது போல எவருடைய வாழ்வு அழியும்?*
*7. வெள்ளத்தைக் கண்டு அஞ்சி காட்டுப்பன்றியும் அதனை அடித்துத் தின்னும் புலியும் என்ன செய்கின்றன?*
*8. தனக்கு நல்ல தங்கமீன் இரை கிட்டியது என்று எண்ணியது எது?*
9. மந்தி – பொருள் தருக.
*10. உவலைக் கூரை ஒழுகிய தெருவில் கவலை முற்றம் காவல் நின்றது எது?*

***(ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.*** *5 X 1=5*

*1. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்* _________________ நூல்கள் எனப்படும்.
*2. உரையாசிரியர்கள்* பலரால் மேற்கோள் காட்டப்பட்ட *தொகை நூல்* ________________.
*3. தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாக அமைந்துள்ள நூல் ____________ ஆகும்.*
*4. கூத்தராற்றுப்படையின் வேறு பெயர் ______________ ஆகும்.*
*5. நெஞ்சாற்றுப்படை என்று _______________________ அழைக்கப்படுகிறது.*

***(இ) பொருத்துக.*** *5 X 1=5*

*1. குறுந்தொகை - நக்கீரர்*
*2. நற்றிணை - பெருங்கௌசிகனார்*
*3. மலைபடுகடாம் - பூரிக்கோ*
*4. திருமுருகாற்றுப்படை* - கடியலூர் உருத்திரங்கண்ணனார்
*5. பெரும்பாணாற்றுப்படை - பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி*

**பகுதி-ஆ**

***(அ) எவையேனும் மூன்றனுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.*** *3 X 3 = 9*

*1. நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும் என்று*
*அன்னை கூறினள் புன்னையது நலனே....*

2. உவலைக் கூவற் கீழ்
மானுண் டெஞ்சிய கலிழி நீரே!

3. நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே!

4. வண்டல் ஆயமொடு உண்துறை தலைஇ
புனல் ஆடு மகளிர் இட்ட பொலம் குழை. . . .

5. கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்பக்....

***(ஆ) பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க.*** ***4 X 9 = 36***

1. சிறுமை செய்யார் மற்றும் நும்மொடு பொறுந்தாது என்றமைந்த நற்றிணைப் பாடல்கள் குறித்து விவரித்துரைக்க.
2. குறுந்தொகைப் பாடல்கள் புலப்படுத்தும் அகக் கருத்துகளை எடுத்துரைக்க.
3. ஐங்குறுநூற்றில் அமைந்த அகவாழ்வியல் செய்திகளை தொகுத்துரைக்க.
4. அதியமானுக்கும் ஔவைக்குமான நட்புறவை விளக்கும் வண்ணம் அமைந்த புறநானூற்றுப் பாடல்களை மதிப்பிடுக.
5. திருமுருகாற்றுப்படை காட்டும் அருவி காட்சியையும் இயற்கை வளத்தினையும் விவரிக்க.
6. மலைபடுகடாம் வெளிப்படுத்தும் பல்வேறு ஓசைகளின் தன்மைகள் குறித்து விளக்குக.

***(இ) இலக்கிய வரலாறு - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.*** ***1 X 10 = 10***

1. புறநானூறு
2. ஐங்குறுநூறு
3. முல்லைப்பாட்டு

**பகுதி-இ**

***(அ) நாடகத் திறனாய்வு - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.*** ***1 X 15 = 15***

1. குடிகுடியைக் கெடுக்கும் கருத்தை உணர்த்தும் புதை குழி நாடகம் குறித்து ஆய்க.
2. குழந்தைகளின் எண்ணங்களை மதிக்க வேண்டும் என்பதை திணிப்பு நாடம் வழி மதிப்பிடுக.
3. இரப்பர் நாடகத்தில் அமைந்த சுற்றுச் சூழல் சிந்தனைகளை ஆராய்க.

***(ஆ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.*** ***1 X 10 = 10***

நீவிர் அண்மையில் சென்றுவந்த புத்தகக் கண்காட்சியினைக் குறித்து உன் தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

நாளிதழில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரத்தைக் கண்டு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

********